வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

MARUTHI MONEY EXCHANGE
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.

மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 10.04.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 94 | பக்கங்கள் : 08

# வெடுக்குநாறிமலை பௌத்தருக்குரியது!

## விரைவில் வர்த்தமானி அறிவித்தல் சபையில் கூறினார் அமைச்சர் சுனில்

கொழும்பு, ஏப். 10

வெடுக்கு நாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்திற்கு உரியவை. அது அமைந்துள்ள பகுதியை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரி வித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம் பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெடுக்குநாறி மலையில் உள்ள நினைவுச் சின்னங்கள் பௌத்த நினைவுச்சின்னங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குகை கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன. இத்தகைய கட்டுமானங்கள் அந்த இடத்தின் தொல்பொருள் நிலப்பரப்பை சேதப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களம் ஏற்கனவே சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எவரேனும் இந்த இடத்தில் மத வழிபாடுகளைச் 07

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் 2017 முதல் திட்டமிட்ட ஒரு தொடர்ச்சியான சதி!

### அநுர அரசு சபையில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது, தனிப்பட்ட சம்பவம் அல்ல, தொடர்ச்சியான சதித் திட்டம், அத்துடன் அது, 2017ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்ட ஒரு சதித் தொடராகும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தின்போது, அரசாங்கத்தின் சார்பில் 07

## பாடசாலை விழாக்கள் இனி எளிய முறையில்!

### கல்வி அமைச்சு அதிரடி உத்தரவு!

கொழும்பு, ஏப். 10

பாடசாலைகளில் விழாக்கள் மற்றும் பல்வேறு நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் போது, செலவுகளைக் ஆகக்குறைந்த மட்டத்தில் பேணுமாறு கல்வி அமைச்சு அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது. 07

## இலங்கை - நாணய நிதியம் இடையே எட்டப்பட்டது ஊழியர் மட்ட இணக்கம்

### 700 மில்லியன் டொலர் விடுவிக்கப்பட வாய்ப்பு

கொழும்பு, ஏப். 10

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ், இலங்கையின் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது ஒருங்கிணைந்த மதிப்பாய்வுகளை நிறைவு செய்வது தொடர்பாக, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கிடையே ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த மதிப்பாய்வுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபை அங்கீகாரம் 07

## அரச மருத்துவர்கள் சங்கத்தின் போராட்டத்தை ஏற்கமுடியாது!

### சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 10

மத்திய கிழக்கு போர் நிலைமைக்கு மத்தியில் நாட்டிலும் மக்கள் நெருக்கடியான சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் போதே அரச மருத்துவர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், சுகாதார சேவைக்கு புதிதாக இணைந்துள்ள இளம் மருத்துவர்கள் யாரும் அச்சமடைய வேண்டாம் என்றும் சுகாதார அமைச்சர் நளிந்த 07

## வடக்குக்கான ரயில் சேவை நேற்று முதல் மீள ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு ரயில் சேவை கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தப் பாதிப்பைத் தொடர்ந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டது.

நேற்று காலை கல்கிசையில் பயணத்தை ஆரம்பித்த ரயில், யாழ்ப்பாணம் காங்கேசன்துறையை வந்தடைந்தது.

ரயில் பாதை மற்றும் பால புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த நிலையில், சேவை மீள 07

## கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிப்பதே அரசின் பிரதான நோக்கம்



### ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10

கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிப்பதே எமது அரசின் பிரதான நோக்கம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

59 ஆவது தேசிய புத்தரிசி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன், விவசாயிகளின் நில உரிமையை உறுதிப்படுத்தும் வகையில், சிக்கலற்ற காணி 07

## அவசர கால சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஏப். 10

நாட்டில் அமுலில் உள்ள அவசர கால சட்டத்தை மேலும் நீடிக்கும் தீர்மானம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு 07

## அமைச்சர் குமார ஜயக்கொடி உடனே பதவி விலகவேண்டும்

### ஜி.எல். பீரிஸ் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 10

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மிகவும் பாரதூரமானவை எனக் குறிப்பிடும் ஜி.எல். பீரிஸ், அவர் உடனடியாக பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மலர் வீதியிலுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் அரசியல் காரியாலயத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 07

## நிரந்தர மீள்குடியேற்றத் திட்டங்களை செயற்படுத்துவதே அரசின் நோக்கம்!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஏப். 10

மக்களின் எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தர மீள்குடியேற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 07

## சுகாதார அமைச்சின் ஏமாற்று நடவடிக்கை!

### சாடுகின்றது மருத்துவர் சங்கம்

கொழும்பு, ஏப். 10

சுகாதார அமைச்சின் ஏமாற்று நடவடிக்கைக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளார்.

பயிற்சிக்குப் பிந்தைய நியமனங்கள் மற்றும் கஷ்டப்பிரதேச சேவை மையப் பட்டியல்களைத் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்சாரக் கட்டணம் மேலும் 15 வீதம் அதிகரிக்க வாய்ப்பு?

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அவதானம்

கொழும்பு, ஏப். 10

தற்போதைய மின் உற்பத்திச் செலவினங்களைக் கருத்திற் கொண்டு, இந்த வருடத்தின் இரண்டாம் காலாண்டுக்காக மின்சாரக் கட்டணத்தை மேலும் 15 வீதத்தால் அதிகரிக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை குறித்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது.

'நஷனல் சிஸ்டம் ஒப்பரேட்டர் பிரைவேட் லிமிடெட்' நிறுவனத்தினால் இந்த வருடத்தின் ஏப்ரல் முதல் ஜூன் வரையான இரண்டாம் காலாண்டுக்காக இந்த மேலதிக கட்டண உயர்வு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்த நிலையில், தற்போது மேலும் 15 வீத அதிகரிப்பு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவன தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத், குறித்த யோசனை தொடர்பில் ஆணைக்குழு தற்போது விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

மின் உற்பத்திக்காக செலவிடப்படும் உண்மையான செலவினங்கள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள அதிகரிப்பின் அவசியம் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும், அடுத்த சில நாள்களில் இது குறித்த இறுதித் தீர்மானம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வருடத்தின் இரண்டாம் காலாண்டில் மின் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதாகக் கூறப்படும் நிலையிலேயே, தேசிய அமைப்பு கட்டுப்பாட்டு நிறுவனத்தினால் இந்த மேலதிக கட்டண உயர்வு கோரப்பட்டுள்ளது.

ஒருவேளை இதற்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில், ஏற்கனவே அமுல்படுத்தப்பட்ட 10 வீத அதிகரிப்புடன் சேர்த்து நுகர்வோர் மீதான மேலதிக சுமை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (அ)

# இலங்கையின் தேயிலைக்கு உலக சந்தையில் மந்தநிலை

கொழும்பு, ஏப். 10

இலங்கையின் தேசிய தேயிலை விற்பனை சராசரி விலையானது கடந்த மார்ச் மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளதாக போர்ப்ஸ் மற்றும் வோக்கர் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

2026 மார்ச் மாதத்தில் ஒரு கிலோகிராம் தேயிலையின் சராசரி விலை 1,144.23 ரூபாவாக (3.63 டொலர்) பதிவாகியுள்ளது. இது பெப்ரவரி மாத விலையான 1,152.11 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 7.88 ரூபா சரிவாகும்.

இதேவேளை, 2025 மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது, ஒரு கிலோகிராம் தேயிலையின் விலை 39.53 ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான தேசிய சராசரி விலை 1,153.25 ரூபாவாகும். இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 26.07 ரூபா குறைவானது.

மேலும், பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 8.31 ரூபா வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இருப்பினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதன் விலை 5.72 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

மாதாந்த அடிப்படையில் 5.72 ரூபா உயர்வைக் காட்டினாலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 69.21 ரூபா எனும் பாரிய விலைச் சரிவைச் சந்தித்துள்ளது.

இலங்கை தேயிலை ஏற்றுமதியின் முக்கிய பங்கைக் கொண்டுள்ள இந்தத் தேயிலை வகை, மார்ச் மாதத்தில் 13.95 ரூபாவினாலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 55.02 ரூபாவினாலும் வீழ்ச்சியடைந்து அதிக அழுத்தத்தைச் சந்தித்துள்ளது. (அ)

# ஜனாதிபதி தலைமையில் நேற்று தேசிய புத்தரிசி விழா

கொழும்பு, ஏப். 10

59 ஆவது தேசிய புத்தரிசி விழா நேற்று ஜனாதிபதி அநுர குமார தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. மகா சங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமான இந்த மாபெரும் கலாசார விழாவின்போது, விவசாயிகள் மிகுந்த பக்தியுடன் தயாரித்த தமது முதற்போக அறுவடையை புத்தபெருமானுக்கு அர்ப்பணித்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, எமது கலாசாரத்தின் பெரும் பகுதியாக விவசாயம் பின்னிப் பிணைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

புத்தரிசி விழா அதன் உச்சகட்ட பலனாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் அடையாளமும் கலாசாரமும் இதன் மூலம் பிரதிபலிக்கின்றது என கூறினார். கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிப்பதே தமது நோக்கம் எனவும், அதற்காக வலுவான தொலைநோக்குப் பார்வையும் வேலைத்திட்டமும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், விவசாயிகளின் காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்காகத் தெளிவான உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# பருத்தித்துறை நகர சபைக்கு எதிராக விசாரணை நடத்துமாறு வர்த்தமானி

யாழ்ப்பாணம், ஏப். 10

பருத்தித்துறை நகர சபைக்கு எதிராக விசாரணை நடத்தும் வர்த்தமானி அறிவிப்பு வடக்கு மாகாண ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையால் புதிய காணி கொள்வனவு செய்யப்பட்டு, நவீன சந்தை கட்டடத்தில் இயங்கிய மரக்கறி சந்தை அப்பகுதிக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில் கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக புதிய சந்தை கட்டடத் தொகுதயில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அங்கு வியாபாரம் செய்ய முடியாத நிலையில் மரக்கறி வியாபாரிகள் பழைய இடமான நவீன சந்தை கட்டடத்தில் சென்று வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் பருத்தித்துறை நகரபிதா தலைமையில் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் மரக்கறி வியாபாரிகளுடன் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அதன்போது வர்த்தகர்கள் அனைவரும் தாம் புதிய சந்தைக்கு சென்று வியாபாரம் மேற்கொள்ளமாட்டோம் என தெரிவித்தமையால் நவீன சந்தை தொகுதியில் மரக்கறி வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்ட நிலையில் புதிய சந்தை தொகுதி தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்நிலையில் இவ் விடயம் குறித்து விசாரணை ஒன்றினை மேற்கொண்டு 3 மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடமாகாண ஆளுநர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி கந்தையா அரியநாயகத்தை நியமித்துள்ளார்.

இது தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

(அ)

# பண்டிகைக் காலத்தில் மதுபோதையில் வாகனம் ஓட்டினால் கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 10

பண்டிகைக் காலத்தில் மது போதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகச் சட்டத்தை மிகக் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்துப் பாவனை மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சேனாதீர தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பண்டிகைக் காலங்களில் ஏற்படும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் விசேட சோத னைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக எவ்வித பாரபட்சமுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை பண்டிகைக் காலத்தில் ஒரு சிறிய வாகன விபத்து இடம்பெற்றாலும் கூட, அதில் சம்பந்தப்பட்ட சாரதிகள் உடனடியாகப் போதைப்பொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

வீதிப் பாதுகாப்பைப் பேணும் வகையில் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# பண்டிகைக்கால உணவு விலைகளில் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 10

பண்டிகை கால உணவு வகைகளின் விலைகள் நேற்று முன் தினம் முதல் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை உற்சவ மண்டபங்கள் மற்றும் உணவு வழங்குநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் அகில ஜயரத்ன கருத்து வெளியிடும் போதே இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மே மாதம் முதல் மேற்கொள்ளப்படும் புதிய முன்பதிவுகளுக்கு 15 வீதம் முதல் 20 வீதம் வரை கட்டணங்கள் அதிகரிக்கப்படலாம். நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், எமது பிரச்னைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து முறையான தீர்வு அல்லது நிவாரணம் கிடைக்குமாயின், இந்த விலையேற்றத்தை மீண்டும் குறைப்பதற்கு எதிர்பார்க்கிறோம்-என்றார்.

(அ)

# பண்டிகை காலத்தையொட்டி லாப்ஸ் எரிவாயு விநியோகம்!

கொழும்பு, ஏப். 10

பண்டிகைக் காலத்தில் லாப்ஸ் எரிவாயுவினை தட்டுப்பாடின்றி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

7,000 மெற்றிக் தொன் லாப்ஸ் எரிவாயுவை ஏற்றிய கப்பல் கடந்த 6ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்ததாக லாப்ஸ் எரிவாயு நிறுவனம் அண்மையில் அறிவித்திருந்ததை தொடர்ந்து குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிவாயு கையிருப்பினை லாப்ஸ் நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அந்த நிறுவனம் அறிவித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# நிகழ்வு மண்டபங்களின் கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 10

நிகழ்வு மண்டபங்கள் மற்றும் உணவு விநியோக சேவை வழங்குநர்கள் இதுவரை வழங்கப்பட்டு வந்த தமது சேவைகளுக்கான கட்டணங்களை 15 வீதத்தால் அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை நிகழ்வு மண்டபங்கள் மற்றும் உணவு விநியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் முன்பதிவு செய்யப்பட்ட ஓடர்களுக்கான கட்டணங்களை 10 வீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
10.04.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அறகலய நினைவாக...!

மத்திய கிழக்கு போரின் விளைவாக தோன்றிய எரிபொருள் நெருக்கடியை, எதிர்பார்த்ததை விடவும் சிக்கல் இல்லாத் முறையில் தற்போதைக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கையாண்டுவருகிறது.

கியூ.ஆர். கோட் முறையில் வாகனங்களுக்கு குறிப்பிட்டளவு எரிபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற போதிலும், ஆங்காங்கே எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முன்பாக வரிசையில் வாகனங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த காட்சி நான்கு வருடங்களுக்கு முன்னர் இதே காலப்பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்தபோது மக்கள் எரிபொருட்களை பெறுவதற்காக மைல் கணக்கில் வரிசையில் இரவு பகலாக சுட்டெரிக்கும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் காத்து நின்ற காட்சியை தவிர்க்க முடியாமல் நினைவுக்கு கொண்டு வருகிறது.

தவறான ஆட்சிமுறைக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கிய நாட்கள் அவை. அந்த போராட்டங்களுக்கு வழிசமைத்த முதல் ஆர்ப்பாட்டம் 2022 மார்ச் 31 இரவு கொழும்புக்கு வெளியே மிரிஹானவில் கோட்டாபயவின் தனிப்பட்ட வாசஸ்தலத்துக்கு வெளியே இடம்பெற்றது. இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவரின் வாசஸ்தலத்துக்கு வெளியே மக்கள் திரண்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட முதல் சம்பவமாக அது அமைந்தது.

அதை தொடர்ந்து கொழும்பு கோட்டை காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக "கோட்டா கோ கம" போராட்டக் கிராமம் தோன்றியதும் அங்கு திரண்டுநின்ற போராட்டக்காரர்களுக்கு எதிராக மே 9 அன்றைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது ஆதரவாளர்களைக் கட்டவிழ்த்துவிட்டு தாக்குதல் நடத்தியதையடுத்து நாடு பூராவும் அரசாங்க அரசியல்வாதிகள் பலரின் வீடுகள் தீக்கிரையாகின.

கொந்தளிப்புக்கு மத்தியில் அன்றைய தினம் மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலகினார். சரியாக ஒரு மாதம் கழித்து ஜூன் 9 அவரது சகோதரர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார். கொழும்பில் இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு கிளர்ச்சி செய்ததையடுத்து கோட்டாபய ஜூலை 13 நாட்டிலிருந்து வெளியேறினார். அத்துடன் ராஜபக்ச ஆட்சி முடிவுக்கு வந்தது.

இலங்கையின் அரசியல் ஒழுங்கை உலுக்கிய அந்த அரகலய போராட்டம் பற்றி தற்போது பொதுவில் எவரும் பேசுவதில்லை. அந்த போராட்டத்தின் விளைவாக தோன்றிய ப அரசியல் நிலைவர மாற்றம் காரணமாக பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைவர்களும் அது பற்றிப் பேசுவதில்லை. ஆனால், அந்த காலப் பகுதியில் காணப்பட்ட அளவிற்கு இல்லாவிட்டாலும், வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்கும் காட்சி அறகலயவை நினைவுபடுத்துகிறது.

அன்று கொள்வனவு செய்வதற்கு பொருட்கள் இருக்கவில்லை. இன்று பொருட்கள் கிடைக்கின்ற போதிலும் பெரும்பாலான மக்களினால் அவற்றை உயர்ந்த விலைகளுக்கு வாங்க முடியாமல் இருக்கிறது. அன்றைய நெருக்கடி நிலை தவறான ஆட்சிமுறை, பொருளாதார முகமைத்துவம் மற்றும் ஊழல் முறைகேடுகளின் விளைவாக ஏற்பட்டது.

அந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவந்து கொண்டிருக்கும் நிலையில் மத்திய கிழக்கு போரின் விளைவாக இன்றைய நெருக்கடி உருவாகியிருக்கிறது. வாழ்க்கைச் செலவு கூரையைப் பிரித்துக் கொண்டு வானளாவ உயர்ந்துகொண்டிருக்கும் நிலையில் இன்றைய அரசாங்கமும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்களை தொடர்ச்சியாக கடுமையாக அதிகரித்த வண்ணமிருக்கிறது. மக்களில் பெரும்பான்மையானவர்களினால் வாழ்க்கைச் செலவைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அறகலய காலப்பகுதியை அரசாங்க தலைவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

# அமெரிக்காவின் படைகள் ஈரானை சுற்றியே இருக்கும்

## ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

வாஷிங்டன், ஏப். 10

ஈரான் "உண்மையான உடன்படிக்கைக்கு" முழுமையாகக் கட்டுப்படும் வரை, அந்த நாட்டைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமெரிக்கப் படைகள் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். ஏதேனும், மீறல்கள் இடம்பெற்றால், இதுவரை கண்டிராத அளவிலான மிகப்பெரிய இராணுவத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தனது "ட்ரூத் சோஷியல்" தளத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப், "உண்மையான உடன்படிக்கை எட்டப்பட்டு, அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் வரை அமெரிக்கக் கப்பல்கள், விமானங்கள் மற்றும் இராணுவ வீரர்கள் ஈரானைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலைத்திருப்பார்கள். ஏதேனும், ஒரு காரணத்துக்காக இது மீறப்பட்டால், முன்னெப்போதும் கண்டிராத வகையில் மிகப்பெரிய மற்றும் வலிமையான தாக்குதல் ஆரம்பமாகும்," என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்கக் கூடாது என்பதும், ஹோர்முஸ் நீரிணை வர்த்தகக் கப்பல் போக்குவரத்துக்குப் பாதுகாப்பானதாக இருக்க வேண்டும் என்பதும் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்கள் என்று ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தினார். "எமது மாபெரும் இராணுவம் அடுத்த கட்டத் தாக்குதலுக்குத் தயாராகவும், அதே வேளை ஓய்வெடுத்தும் வருகின்றது. அமெரிக்கா மீண்டும் வந்துவிட்டது" என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் மத்தியஸ்தத்துடன் வாஷிங்டன் மற்றும் தெஹ்ரான் இடையே இரண்டு வார கால போர் நிறுத்தம் எட்டப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு ட்ரம்ப்பின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. கடந்த ஆறு வாரங்களாகத் தொடர்ந்த மோதலை இந்தப் போர்நிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதுடன், ஹோர்முஸ் நீரிணையில் எரிசக்தி விநியோகம் மீண்டும் தொடங்கலாம் என்ற நம்பிக்கையால் உலகளாவிய சந்தையில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஹோர்முஸ் நீரிணையில் பாதுகாப்பான பயணம் சாத்தியம் என்றும், ஆனால் அது ஈரானிய ஆயுதப் படைகளின் ஒருங்கிணைப்புக்கு உட்பட்டது என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்களை நிறுத்தும் ட்ரம்ப்பின் முடிவை இஸ்ரேல் ஆதரித்துள்ளது. இருப்பினும், இந்தப் போர்நிறுத்தம் லெபனானுக்குப் பொருந்தாது என்று இஸ்ரேல் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. இதற்கமைய, கடந்த பெப்ரவரி மாதம் போர் தொடங்கியதிலிருந்து லெபனான் மீது புதன்கிழமை நடத்தப்பட்ட மிகக் கடுமையான தாக்குதல்களில் குறைந்தது 182 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதல்கள் காரணமாக, அமெரிக்காவுடன் நிரந்தர அமைதி ஒப்பந்தத்தை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்வது "நியாயமற்றது" என்று ஈரான் எச்சரித்துள்ளது. இது தற்போதைய போர்நிறுத்தத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், அமெரிக்கா மற்றும் ஈரான் பிரதிநிதிகள் இன்று வெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத்தில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(எ)

# கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு மருத்துவர்கள் நேற்று போராட்டம்

ஹற்றன், ஏப். 10

பேச்சுவார்த்தைகளின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டி, குறிப்பாக சுகாதார அமைச்சு முன்னர் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளை மீறி உள்ளக மருத்துவப் பயிற்சி மருத்துவர் நியமனங்களை வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரச மருத்துவ அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை காலை 08.00 மணி முதல் 48 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரால் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மருத்துவமனை வளாகம் முழுவதும் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனை அரச மருத்துவ அதிகாரிகளின் இந்த எதிர்ப்பு போராட்டம் காரணமாக வெளிநோயாளர் பிரிவு முற்றாக செயலிழந்து காணப்பட்டது. மேலும், கிளினிக் சேவைகள் பாதிக்கப்பட்டன. இதில் அவசர சிகிச்சை பிரிவுகள் தவிர்ந்த ஏனைய சாதாரண நோயாளிகள் சிகிச்சை பெற முடியாமல் பெரும் அவதிக்குள்ளாகினர்.

பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படும் நிலையில் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சை, மகப்பேறு பிரிவுகள் என்பன வழமை போன்று இயங்கின. (எ)

# விலைவாசி அதிகரிப்புக்கு எதிராக நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

நீர்கொழும்பு, ஏப். 10

நாட்டில் விலைவாசி அதிகரிப்புக்கு எதிராக நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிவாயு விலை அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு என்பனவற்றுக்கு எதிராக நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று மாதாந்த அமர்வுக்கு முன்பதாக காலை 9 மணியளவில் மாநகர சபை முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏழு உறுப்பினர்கள் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் இதன்போது சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன் அவர்கள் கறுப்பு ஆடை அணிந்திருந்ததோடு கைகளில் கறுப்புப் பட்டி அணிந்திருந்தனர்.

இதன்போது சபை உறுப்பினர்கள் மாநகர சபை வாயிலில் இருந்து நகர சபை மண்டபம் வரை சென்று, தமது ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தனர்.

மாநகர சபையின் ஆளும் தரப்பினரால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதாகவும், எந்தவிதமான உருப்படியான வேலைகளையும் அவர்கள் நீர்கொழும்பு நகரத்துக்காக செய்யவில்லை எனவும் குற்றஞ்சாட்டினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 10 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 27

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | அஷ்டமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி ஆதரிப்பார். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் நீங்கும். கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**மிதுனம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனி திறமைகளை கண்டறிவீர்கள். சேமிக்கத் தொடங் குவீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**துலாம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**விருச்சிகம்**
கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உற்சாகமான நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக்கொண்டே இருக்கும். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் ஓங்கும் நாள்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் நண்பர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். முயற்சியால்

# அரசின் வேலைத்திட்டங்களுக்கு வழிகாட்டும் எதிர்க்கட்சி இல்லை

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் கவலை

கொழும்பு, ஏப். 10


நாடு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்ற போது அதனை பயன்படுத்தி எவ்வாறு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது என்று சிந்திக்கும் எதிர்க்கட்சியே எமது நாட்டில் இருக்கிறது. மாறாக நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்து - நாட்டை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு சரியான பாதையை காட்டக்கூடிய எதிர்க்கட்சி நாட்டில் இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "இந்த நாட்டை எமது அரசாங்கம் பொறுப்பேற்கும் போது வாங்கிய கடனைக்கூட திருப்பிச் செலுத்த முடியாதளவுக்கு வங்குரோத்து நிலைமையிலேயே இருந்தது. இவ்வாறு வீழ்ந்து கிடந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்து நிலையான இடத்துக்கு கொண்டு வருவதே எங்களின் முதலாவது வேலையாக இருந்தது. இப்போது ஓரளவுக்கு பொருளாதாரத்தை ஸ்தீரமான நிலைமைக்கு கொண்டு வந்துள்ளோம்.

இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் போதே டித்வா சூறாவளி இந்த நாட்டை தாக்கியது. இதில் இருந்தும் நாட்டை மீட்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போது, நாடு இருள்மயமாக இருந்த போதும் கூட குழம்பிய குட்டையில் எப்படி ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்வது என்றே எதிர்க்கட்சியினர் சிந்திக்கின்றனர். மாறாக நெருக்கடியான நேரத்தில் சரியான பாதையை காட்டும் எதிர்க்கட்சி ஒன்று எமக்கு கிடைக்கவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். ஆனால், பாதிப்புகளுக்கு உரிய நஷ்ட ஈடுகளை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தோம். மீனவர்களுக்கும் தேவையான உதவிகளை வழங்கினோம்."- என்றார். (எ)

# 2,409 ஏக்கர் நிலத்தில் சிறுபோக செய்கை



மன்னார், ஏப். 10

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் இம்முறை 2,409 ஏக்கர் நிலத்தில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் புதன்கிழமை மாலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கட்டுக்கரை குளத்தின் கீழ் இம்முறை சிறுபோகப் பயிர்ச்செய்கையை முன்னெடுப்பது குறித்து பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கடந்த காலங்களில் 10:1 என்ற அடிப்படையில் நீர் வழங்கப்பட்டது. எனினும், குளத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் "டித்வா" புயலால் ஏற்பட்ட சேதங்களைக் கருத்தில் கொண்டு, இம்முறை 13:1 என்ற விகிதாசார அடிப்படையில் நீர் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மொத்தம் 2,409 ஏக்கர் நிலத்தில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வழக்கமாக ஜூன் மாதம் தொடங்கும் பயிர்ச்செய்கை, குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக இம்முறை ஏப்ரல் மாதமே தொடங்கப்பட்டு, ஜூன் மாதத்துக்குள் அறுவடை நிறைவு செய்யப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கான மானியம் ஒரு ஹெக்டேயருக்கு 25,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

யூரியா உள்ளிட்ட உரங்களை விரைவாக விநியோகிக்கத் தேவையான கொள்வனவுக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# கத்திக்குத்துக்கு இலக்கான குடும்பப் பெண் உயிரிழப்பு

வவுனியா, ஏப். 10

வவுனியா- சொக்கடிப்புளவு கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு சகோதரனின் கத்திக்குத்துக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பவளரத்தினம் செல்வமலர் (வயது- 56 என்ற) பெண் மீது அவரது சகோதரன் முறையானவர் மதுபோதையில் கத்தியால் குத்தியதில் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த நிலையில், குறித்த சம்பவத்தின் சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதோடு குற்றம் இடம்பெற்ற இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்

கொழும்பு, ஏப். 10

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வின் காரணமாக மதியம் 12.12 மணியளவில் சிலாபம், விங்கிரிய, ஹல்மில்லவெவ, படுவஸ்நுவர, கொகரெல்ல, கவுடுபெலல்ல, கொப்பவெலி மற்றும் கிரான்குளம் போன்ற இடங்களுக்கு மேலாக சூரியன் உச்சம் கொடுக்கின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல், மேல், சப்ரகமுவ, மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மொனராகலை மாவட்டங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்.

சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் வறட்சியான வானிலை நிலவக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிலாபம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்குத் திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

காலி தொடக்கம் மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 40 - 45 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங் களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அன்பளிப்பு பெற முற்றாக தடை

## பொலிஸ் மா அதிபர் உத்தரவு

கொழும்பு, ஏப். 10

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொலிஸ் நிலையங்களில் முன்னெடுக்கப்படும் கொண்டாட்டங்கள் மற்றும் அன்பளிப்புகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் விசேட அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் அன்பளிப்புகளை வழங்குவதோ அல்லது அவற்றை சிரேஷ்ட அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதோ முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

புத்தாண்டு விருந்துபசாரங்களுக்காக பொலிஸ் அதிகாரிகளிடம் பணம் வசூலிப்பதோ அல்லது வர்த்தக சமூகத்திடம் நிதியுதவி கோருவதோ முறையற்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெளித்தரப்பினரின் பங்களிப்புடன் பொலிஸ் நிலையங்களில் புத்தாண்டு விழாக்களை நடத்துவதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புத்தாண்டு உபசரிப்புக்காக ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தலா 250 ரூபாய் வீதம் பொலிஸ் வெகுமதி நிதியிலிருந்து வழங்க பொலிஸ் மா அதிபர் அனுமதி அளித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தல்களை மீறிச் செயல்படும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு மேற்பார்வை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைவாக, 17 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ)

# நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வீதி விபத்துக்களில் ஐவர் பலி!

கொழும்பு, ஏப். 10

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் புதன்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி அநுராதபுரம் - கல்கிரியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உல்பத்தகம - உதுரவ வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் 18 மற்றும் 70 வயதுடையவர்கள் எனவும் கல்கிரியாகம பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொழும்பு - காலி பிரதான வீதியில் தனியார் பஸ் ஒன்று கார் ஒன்றை முந்திச் செல்ல முயன்றபோது, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கிங்தொட்டை பகுதியை சேர்ந்த 58 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைது செய்யப்பட்டதுடன் காலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேநேரம், கிராந்துருகோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனை - தளுக்கான வீதியின் ஹொபரியாவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று பாதசாரி மீது மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கிராந்துருகோட்டை பகுதியை சேர்ந்த 61 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது.

மேலும்வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரம்ஹாவெவ - கட்டுபொத்த வீதியின் கல்லஹெபிட்டிய பகுதியில் கார் ஒன்று வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் காயமடைந்த 83 வயதுடைய முதியவர் குருநாகல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

# கஞ்சா தோட்டங்கள் முற்றுகை: 1,60000 செடிகள் தீயிட்டு அழிப்பு

அநுராதபுரம், ஏப்.10

எத்திமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யால சரணாலயப் பகுதியில் பயிரிடப்பட்டிருந்த இரண்டு பாரிய கஞ்சா தோட்டங்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் புதன்கிழமை முற்றுகையிட்டனர்.

இதன்போது சுமார் 03 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த ஒரு இலட்சத்து அறுபதாயிரம் கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கண்டுபிடிக்கப்பட்ட கஞ்சா செடிகளில் இருந்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மாதிரிகள் எடுக்கப்பட்ட பின்னர், ஏனைய அனைத்து செடிகளும் அவ்விடத்திலேயே தீயிட்டு அழிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்காக எத்திமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அனர்த்தகால நிதியை கொள்கையடிக்கவில்லை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஏப். 10

அனர்த்த நிலைமைகளின் போது கிடைக்கப் பெற்ற நிதியை ராஜபக்ஷக்களை போன்று கொள்ளையடிக்கவில்லை. ரணிலை போன்று நண்பர்களுக்கு பகிர்ந்தளிக்கவில்லை. மக்களுக்கு முறையாக பகிர்ந்தளித்துள்ளோம். பூகோள ரீதியில் தோற்றம் பெற்ற நெருக்கடியை சிறந்த முறையில் ஜனாதிபதி முகாமைத்துவம் செய்துள்ளார். தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிகளின் தாக்கத்துடன் மே 31 வரை சமாளித்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். எரிபொருள் விலை வெகுவிரைவில் குறைவடையும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மத்திய கிழக்கு மோதல்களினால் தோற்றம் பெற்ற தாக்கங்களால் ஏற்பட்ட நெருக்கடிகளை அரசாங்கம் என்ற அடிப்படையில் முகாமைத்துவம் செய்துள்ளோம். பூகோள நெருக்கடியால் இலங்கையில் மாத்திரம் தான் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு எதிர்க்கட்சியினர் கருத்துக்களை வெளியிடுகின்றனர். எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். எடுக்கப்பட்ட கடுமையான தீர்மானங்களினால் தான் தற்போது எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பியுள்ளது."- என்றார். (எ)

# பேரன் தாக்கியதில் பாட்டி உயிரிழப்பு!

அநுராதபுரம், ஏப். 10

தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வானேகம பகுதியில், புதன்கிழமை காலை வயோதிபப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் தம்புத்தேகம, மல்வானேகம பகுதியைச் சேர்ந்த 82 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

தனிப்பட்ட தகராறு காரணமாக உயிரிழந்த பெண்ணின் பேரனே இந்த கொலையை செய்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 23 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிலக்கரி கொள்வனவு மோசடியால் நாட்டுக்கு ரூ 2. 2 பில்லியன் நஷ்டம்

## கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை

கொழும்பு, ஏப். 10

டிரைடென்ட் செம்பார் லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து நிலக்கரி கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று கணக்காய்வாளர் நாயகம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் அனுமதி 2025 நவம்பர் 20ஆம் திகதி வழங்கப்படவிருந்த போதிலும், அதற்கு ஒரு நாளைக்கு முன்னதாகவே, இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை அரசாங்கத்துடன் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடும் சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனம் முறையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்ற அதிர்ச்சியூட்டும் தகவலையும் அந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த நிலக்கரியால் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள மொத்த நஷ்டம் 2, 237.70 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒன்பது தடவைகளாக இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரிகளின் மூலம் இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட இறக்குமதிகளில் முறையே 163.5 மில்லியன் ரூபாய் மற்றும் 94.6 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன், அடுத்தடுத்த கட்டங்களில் அளவு அதிகரித்துச் சென்றுள்ளது.

குறிப்பாக எட்டாவது மற்றும் ஒன்பதாவது கட்ட இறக்குமதிகளில் தலா 390 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விநியோகஸ்தரிடம் இருந்து நஷ்டஈடு கோருவதன் மூலம் இந்த 2. 2 பில்லியன் ரூபாய் இழப்பை மீட்டெடுக்க முடியும் எனவும் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# "அநுர அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்"


கொழும்பு, ஏப். 10

வெளிப்படைத்தன்மை வாய்ந்த ஆட்சி நிர்வாகத்தை பாதுகாப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் நிலவும் இடைவெளிகளைக் களைந்து, பணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அநுர அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

அண்மையகாலங்களில் வலுவிழந்துவரும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கரிசனைகளை வெளிப்படுத்திவரும் நிலையில், இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் கரு ஜயசூரிய மேலும் கூறியிருப்பதாவது:

தகவல் அறிவதற்கான நாட்டுமக்களின் உரிமையை உறுதிப்படுத்துவதன் ஊடாக ஜனநாயகத்தை மேலும் விரிவானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாற்றக்கூடிய ஒரு சட்டம் இருக்கிறது என்றால், அது தகவல் அறியும் உரிமைச் சட்டம் மாத்திரமேயாகும். அர்ப்பணிப்பு மிகுந்த ஊடகவியலாளர்கள், விழிப்புணர்வுள்ள பிரஜைகள் மற்றும் சமூக நலன் விரும்பிகளின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தின் ஊடாகவே பொறுப்புக்கூறல் தொடர்பான மற்றும் ஊழலுக்கு எதிரான பொதுமக்களின் கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன- என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருகோணமலையில் ரயில் இயந்திரம் தீக்கிரை



திருகோணமலை, ஏப். 10

திருகோணமலை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் இயந்திரம் நேற்று முன்தினம் பிற்பகல் 03.00 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்து சேதமடைந்தது.

தூரப் பிரதேசங்களில் இருந்து நிலையத்துக்கு வரும் ரயில்களை, நிலைய எல்லைக்குள் இழுத்துச் சென்று நிறுத்தும் பணிகளுக்காக இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

நேற்று முன்தினம் மதியம் கொழும்பிலிருந்து வந்த ரயிலின் பெட்டிகளை இடமாற்றும் பணியில் குறித்த இயந்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதே, திடீரென இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்து குறித்து கருத்து தெரிவித்த பிரதான ரயில் நிலைய அதிபர் எஸ். சர்வேஸ்வரன்,

"ரயில் இயந்திரம் தீப்பிடித்தமைக்கான காரணம் குறித்து தற்போது உறுதியாகக் கூற முடியாதுள்ளது. எனினும், தீயணைப்புத் துறையினர் இது குறித்து விசாரணை நடத்தி விரைவில் தகவல்களை வழங்குவார்கள்"- எனத் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்தினால் ரயில் இயந்திரம் பெரும் சேதமடைந்தது. (எ)

# வலம்புரி சங்குடன் சந்தேகநபர் கைது

களுத்துறை, ஏப். 10

வலம்புரி சங்கு ஒன்றை விற்பனை செய்ய முயன்ற சந்தேகநபர் ஒருவரை களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்தனர்.

களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, புதன்கிழமை மதியம் களுத்துறை இ. போ. ச. சாலைக்கு அருகில் இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, வலம்புரிச் சங்கு ஒன்றை 35 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யத் தயாராக இருந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# கணேமுல்லையில் பாரியளவிலான போதைப்பொருள் மீட்பு: ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 10

கணேமுல்ல, பொல்லன வடக்கு பிரதேசத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சொந்தமான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கையிருப்புடன் நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மேல் மாகாண வடபிரிவு குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 12 கிலோ 300 கிராம் ஐஸ் போதைப்பொருள், 9 கிலோ 946 கிராம் ஹெரோயின், ஒரு மோட்டார் சைக்கிள், தராசுகள் மற்றும் பணத்தை எண்ணும் இயந்திரம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கணேமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனவும், குறித்த போதைப்பொருள் கையிருப்பு தற்போது வெளிநாட்டில் விளக்கமறியலில் உள்ள ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக்குச் சொந்தமானது என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)

# "ஆளும் தரப்பில் எவருக்கும் தற்றுணிவு கிடையாது"

கொழும்பு, ஏப். 10

அமெரிக்கா- இஸ்ரேலின் சட்டவிரோத செயல்பாடுகளினால் இலங்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று பகிரங்கமாக குறிப்பிடுவதற்கு ஆளும் தரப்பில் எவருக்கும் தற்றுணிபு கிடையாது. ஈரானிய தலைமைத்துவம் மற்றும் ஈரான் மக்களால் முஸ்லிம் சமூகம் இன்று தலை நிமிர்ந்துள்ளது. ஈரானிய மக்களுக்கு சிரம் தாழ்த்தி கௌரவமளிக்கிறேன். ஈரான் நட்பு நாடு என்று அரசாங்கம் குறிப்பிட்டாலும், அமெரிக்காவுக்கும், இஸ்ரேலுக்கும் சார்பாகவே ஆட்சியாளர்கள் செயல்படுகிறார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# அம்பாறையில் நீராடத்தடை: மீறுவோர் மீது சட்டம் பாயும்

கல்முனை, ஏப். 10

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆறுகள், குளங்கள் மற்றும் நீர் ஏந்து பகுதிகளில் பொது மக்கள் நீராடுவதற்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம். றியாஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அனுபமா மங்கள விக்ரமாராச்சியின் அறிவுறுத்தலுக்கமைய, இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, பிரதிப் பொலிஸ் மா அதிபர், நீர்ப்பாசனப் பணிப்பாளர், சகல பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், வனப் பரிபாலன மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

குறிப்பாக, உஹன பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சடயந்தலாவ ஆற்றில் தற்போது நீர்மட்டம் அதிகரித்து காணப்படுவதோடு, அங்கு ஆழமான கற்பாறைகளும் உள்ளன. இதனால் இப்பகுதி பாதுகாப்பற்ற இடமாக அடையாளப்படுத்தப்பட்டு, அங்கு நீராடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் போக்குவரத்துப் பாதைகளும் மூடப்பட்டன.

அண்மைக்காலமாக சடயந்தலாவ ஆற்றுக்கு நீராட வரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும், ஆற்றின் தற்போதைய அபாயகரமான நிலைமையால் உயிராபத்துகள் ஏற்படக்கூடும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

தடை செய்யப்பட்டுள்ள பகுதிகளில் பொலிஸார் விசேடரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தடை உத்தரவை மீறிச் செயல்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட பிரதிப் பணிப்பாளர் றியாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ)

# மின்னல் தாக்கி யுவதி பலி!

மொனராகலை, ஏப். 10

வெல்லவாய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஹந்தபனாகல பகுதியில் நேற்றுக்காலை மின்னல் தாக்கியதில் 23 வயது யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில், வீட்டின் அருகில் உள்ள விவசாய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த தனது தாய் மற்றும் தந்தைக்கு குடையை கொடுத்து, அவர்களை வீட்டுக்கு அழைத்து வருவதற்காக சென்ற போதே இந்த சம்பவம் நிகழ்ந்தது.

மின்னல் தாக்கியதில் குறித்த யுவதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வெடுக்குநாறிமலை...

செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால், அவ்வாறு செய்யும்போது தொல்பொருட்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது.

தொல்பொருட்களை அழிப்பது, சிதைப்பது, இடமாற்றுவது அல்லது மாற்றுவது ஆகியவை தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டமீறல்களாகக் கருதப்படும்.

ஆகவே வெடுக்கு நாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்திற்கு உரியவை. விரைவில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் - என்றார். (அ)

## ஈஸ்டர் ஞாயிறு...

உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் நடந்த பல சம்பவங்கள் இதனுடன் தொடர்புடையவை என்பது விசாரணைகளில் வெளியாகியுள்ளதாக அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு, எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதியுடன் ஏழு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்நிலையில், இது தொடர்பாக பாராளுமன்றத்தில் நடத்தப்படும் 13 ஆவது விவாதம் இதுவாகும் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். இந்த தாக்குதல்கள் தொடர்பில், நீதிமன்றத்தில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அனைத்துத் தகவல்களையும் பகிரங்கப்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகளின்படி, சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான குழுவினால் இது தொடர்பான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

2018 இல் மட்டக்களப்பில் வவுணதீவில் இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டமை.

2018 டிசெம்பர் 23ஆம் திகதியன்று மாவனல்லை பகுதியில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டமை. 2019 இல், வனாத்தவில்லு பகுதியில் வெடிபொருட்கள் மற்றும் டெட்டனேட்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டமை. 2019இல் மாவனல்லையில் தஸ்லீம் என்பவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை.

2019 ஏப்ரல் 16ஆம் திகதியன்று, காத்தான்குடி, பாலமுனை பகுதியில் உந்துருளி ஒன்று வெடிக்க வைக்கப்பட்டமை. 2019 ஏப்ரல் 21ஆம் திகதியன்று உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற எட்டு தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் என்பனவே இந்த திட்டத்தின் தொடர்ச்சியான சம்பவங்களாகும் என்று அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

இந்தநிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளில் தவறுகள் இழைக்கப்பட்டு, திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில், வவுணதீவு பொலிஸாரின் கொலைகளைப் புனர்வாழ்வு பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே செய்ததாகக் கூறி, அஜந்தன் மற்றும் சர்வானந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

எனினும், தற்போதைய விசாரணைகளின் மூலம், இந்தக் கொலைகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் செய்யவில்லை என்பதும், சஹாரான் தலைமையிலான குழுவே செய்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 2018 ஆம் ஆண்டிலேயே வவுணதீவு கொலைகளின் உண்மையான குற்றவாளிகள் அதாவது சஹ்ரான் குழுவினர் கைது செய்யப்பட்டிருந்தால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுத்திருக்க முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய விசாரணைகளின் அடிப்படையில், விசாரணைகளைத் திசை திருப்பியமை மற்றும் தடயங்களை மறைத்தமை தொடர்பில் யசீல் பாவா காத்தான்குடி-ஜெகீல் மற்றும் பொத்துவில் சரத் சமந்த போன்றோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் இந்தத்தாக்குதலுக்குப் பின்னாலுள்ள சதித் திட்டத்தைக் கண்டறிய விசேட விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு வவுணதீவில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் திட்டமிட்ட முறையில் திசைதிருப்பப்பட்டது என அமைச்சர் குறிப்பிட்டார்.

அப்போது கொல்லப்பட்ட அந்த அதிகாரிகளிடமிருந்து காணாமல் போன இரண்டு துப்பாக்கிகள் புதிய விசாரணைகளின் மூலம் நிந்தவூர் மற்றும் வனாத்தவில்லு பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முகமது ஷரீப் ஆதம் லெப்பை என்ற கபூர் மாமா என்பவரின் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன. 2018 லேயே இந்தக் கொலைகளுக்குப் பின்னால் சஹாரான் குழுவினர் இருப்பது கண்டறியப்பட்டிருந்தால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுத்திருக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சாலே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்தபோது, இஸ்லாமிய தீவிரவாதிகளின் செயல்பாடுகளை முன்கூட்டியே தெரிந்திருந்தும் அவற்றைத் தடுக்கத் தவறியதாகவும், தாக்குதலுக்குப் பின்னர் குற்றவாளிகளைப் பாதுகாக்க நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

விசாரணைகளைச் சரியாக முன்னெடுப்பதற்குப் பதிலாக, கடந்த கால அரசாங்கங்கள் பல தடைகளை ஏற்படுத்தியதாக அமைச்சர் விமர்சித்தார். கோட்டாபய பதவிக்கு வந்த 48 மணி நேரத்திற்குள், ஷானி அபேசேகர உள்ளிட்ட 22 குற்றப்புலனாய்வு அதிகாரிகளை இடமாற்றம் செய்தார்.

எந்தவித நீதிமன்ற உத்தரவுமின்றி குற்றப்புலனாய்வுத்துறையில் பணியாற்றிய 704 அதிகாரிகளுக்கு சட்டவிரோதப் பயணத் தடை விதிக்கப்பட்டது. இந்த சட்டவிரோதப் பயணத்தடை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, ஒரு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னைய அரசாங்கங்கள் ஹேஜாஸ் ஹிஸ்புல்லா போன்றவர்களைக் கைது செய்து விசாரணைகளைத் திசைதிருப்பினர். உதய கம்மன்பில போன்றவர்கள் இப்போது சஹாரானே மகா மூளையாளர் எனக் கூறுவது ஒரு "பலவீனமான திரைக்கதை" என அமைச்சர் விமர்சித்தார்.

சஹ்ரானுக்கு மேலிருந்து அவரை இயக்கிய ஒரு குழு அல்லது நபர் பற்றிய தகவல்கள் தற்போது கிடைத்துள்ளன. அது குறித்த விசாரணைகள் மிக இரகசியமாகவும் தீவிரமாகவும் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் தமது பாராளுமன்ற உரையில் தெரிவித்தார். முன்னாள் அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் அவருக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முன்கூட்டியே தெரிந்திருந்தது விசாரணைகளின் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. 270 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட மற்றும் 46 வெளிநாட்டவர்கள் உயிரிழந்த இந்த பாரிய தாக்குதல் தொடர்பில், தற்போதைய அரசாங்கம் எவருக்கும் அஞ்சாமல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியான விசாரணைகளை முன்னெடுக்கும் என அமைச்சர் உறுதியளித்தார். (அ)

## பாடசாலை...

பாடசாலை நிகழ்வுகளுக்காகப் பெற்றோர்களிடமிருந்து அதிகப்படியான பணம் வசூலிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். எதிர்காலத்தில் நடத்தப்படும் அனைத்து நிகழ்வுகளும் மிகவும் எளிமையான முறையிலும், குறைந்த செலவிலும் நடத்தப்பட வேண்டும் என்பதை அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதற்கு முன்னர் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் புறக்கணித்து, சில பாடசாலைகள் இன்னும் ஆடம்பரமான முறையில் விழாக்களுக்காக அதிக நிதியைச் செலவிடுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பாடசாலை நிதி முகாமைத்துவம் தொடர்பான 54/2023 இலக்கச் சுற்றுநிருபம் மற்றும் அது சார்ந்த ஏனைய நிதி விதிமுறைகளை அதிபர்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என நினைவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை நாணய...

வழங்கியவுடன், இலங்கைக்கு சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கை அதிகாரிகள் முன்னெடுத்துள்ள பொருளாதார நடவடிக்கைகள், நிலையான மீட்சியை நோக்கிய முன்னேற்றத்தைக் காட்டுவதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் உத்தியோகபூர்வ கையிருப்பு தொடர்ந்து அதிகரித்து வருகின்றது, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மற்றும் அரச வருமானத் திரட்டல் ஆகியன எதிர்பார்த்ததை விட சிறப்பாக அமைந்துள்ளன,நாட்டின் பொருளாதாரச் செயற்திறன் முன்னரே கணிக்கப்பட்டதை விட வலிமையாக உள்ளமை இந்த இணக்கப்பாட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கை இன்னும் சில வெளிவாரி அபாயங்களை எதிர்நோக்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் இலங்கைப் பொருளாதாரத்திற்குப் புதிய சவால்களை ஏற்படுத்தக்கூடும்.

உலகளாவிய ரீதியில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில், பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், மீட்சியைத் தொடர்வதற்கும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பது மிகவும் அவசியமானது என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக, வெளிவாரி அதிர்ச்சிகளைத் தாங்கும் வகையில் பொருளாதார ரீதியான மீளெழுச்சித் திறனை கட்டியெழுப்புவது மிக முக்கியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கிராமப்புற மக்களின்...

உறுதிப்பத்திரங்களை வழங்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஜனா திபதி குறிப்பிட்டார்.

சிதைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குளங்களை மீளப்புனரமைக்கும் திட்டத்தை அரசு உறுதியுடன் செயல்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தம் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்கு அஞ்சப்போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## அரச மருத்துவர்கள்...

ஜயதிஸ்ஸ வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மருத்துவ பயிற்சிக்கு பின்னரான மருத்துவ நியமனங்களை வழங்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன், சுகாதார அமைச்சினால் பயிற்சிக்கு பின்னரான மருத்துவ நியமனங்களுக்காக விண்ணப்பித்திருந்த 436 புதிய மருத்துவ அதிகாரிகளுக்கான நியமனங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஆனால், இந்த மருத்துவ நியமனங்களுக்காக விண்ணப்பித்திருந்த 436 பேரும் முதல் முறையாக நியமிக்கப்படுவதால் இதற்கு இடமாற்று சபைக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, அவர்கள் நேற்று முதல் எதிர்வரும் 11 ஆம் திகதிக்குள் தமக்கு ஒதுக்கப்பட்ட அரச மருத்துவமனைகள் அல்லது சுகாதார நிறுவனங்களில் பணியில் இணையவுள்ளனர்.

இந்த நிலையில், புதிய மருத்துவர்கள் தங்களுடைய இடமாற்றங்களை ஏற்றுக்கொண்டு சேவையில் இணையும்போது, அதனை முன்னிறுத்தி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுப்பது பொருத்தமற்றது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். எனவே, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடு த்துள்ள இந்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை அரசாங்கம் என்ற வகையில் நாம் அதற்கு முகம் கொடுப்பதற்கு தயாராகவே இருப்பதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

அத்துடன், புதிய மருத்துவர்கள் எவ்வித அச்சுறுத்தலுக்கும் அடிப்பணியாமல் சேவையில் இணைந்துக் கொள்ளுமாறும் அழைப்பு விடுப்பதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வலியுறுத்தியுள்ளார். (அ)

## வடக்குக்கான ரயில்...

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகமாக ரயில் பாதை புனரமைக்கப்பட்ட பின்னர், கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் ரயில் சேவை முன்னெடுக்கப்பட்டதுடன் கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான சேவை குறைந்த வேகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அதன் பின்னர், சேதமடைந்த பகுதிகளை முழுமையாக புனரமைப்பதற்காக வடக்குக்கான ரயில் சேவை மீண்டும் கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தொடர்ந்து, இந்திய அரசாங்கத்தின் 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி பங்களிப்பில், புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு நேற்று ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5.15 மணிக்கு, கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை நோக்கியும், பிற்பகல் 1.05 மணிக்கு காங்கேசன் துறையில் இருந்து கல்கிசை நோக்கியும், ரயில் சேவை முன்னெடுக்கப்பட்டது. (அ)

## சுகாதார அமைச்சின்...

தயாரிப்பதில் சட்டவிரோதமான மற்றும் நிறுவனக் கோவைக்கு முரணானச் செயல்கள் நடந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு தழுவிய ரீதியில் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டமை மற்றும் முறையற்ற இடமாற்றப் பட்டியல்கள் வெளியிடப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

இது குறித்து சுகாதார அமைச்சருடன் கலந்துரையாட வாய்ப்பு கோரியும், அது தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நேரிட்டதுடன், பின்னர் ஜனாதிபதியின் தலையீட்டால் பேச்சுவார்த்தைக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதால் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பேச்சுவார்த்தைக்கு முன்னதாக அந்த இடமாற்றப் பட்டியலை வெளியிட வேண்டாம் என இணக்கம் காணப்பட்ட போதிலும், சுகாதார அமைச்சு அதனை வெளியிட்டதன் மூலம் மருத்துவர்களை ஏமாற்றியுள்ளது. வேலைநிறுத்தம் அமுல்படுத்தப்பட்டாலும், சிறுவர் வைத்தியசாலைகள், புற்றுநோய் வைத்தியசாலைகள், சிறுநீரக அலகுகள், மனநல நிறுவனம் மற்றும் அவசர சிகிச்சை சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும்-என்றார். (அ)

## அமைச்சர் குமார...

கருத்துத் தெரிவித்த அவர், அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் அரசாங்கம் முன்வைக்கும் நிலைப்பாட்டை கடுமையாக விமர்சித்தார். குறித்த ஊழல் சம்பவம் அமைச்சர் பதவியேற்பதற்கு முன்பு இடம்பெற்றதாகக் கூறி நடவடிக்கை தேவையில்லை என அரசாங்கம் வாதிப்பது முற்றிலும் ஏற்க முடியாதது என அவர் தெரிவித்தார்.

குமார ஜயக்கொடி உரக்கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்று அதிகாரியாக இருந்த காலத்தில் முறையற்ற கொள்முதல் நடைமுறைகள் மூலம் தனியார் நிறுவனத்துக்கு இலாபம் ஏற்படுத்தியதோடு, அரசாங்கத்துக்கு பெரும் நட்டம் ஏற்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இந்த விவகாரத்தில் வழக்கு தொடரக்கூடிய அளவுக்கு போதிய ஆதாரங்கள் உள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நபர் அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்போ பின்னரோ குற்றச்சாட்டுகள் இடம்பெற்றதா என்பது முக்கியமல்ல. அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாக குற்றச்சாட்டு இருந்தால் சட்ட நடவடிக்கை அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இத்தகைய பின்னணியைக் கொண்ட ஒருவர் முக்கிய அமைச்சுப் பொறுப்பில் தொடர்வது மக்களின் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறிய அவர், ஜனநாயகக் கொள்கைகளை மதித்து அமைச்சர் தற்காலிகமாகவேனும் பதவி விலக வேண்டும் அல்லது அரசாங்கம் அவரை உடனடியாக பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். (அ)

## நிரந்தர...

டித்வா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 29 பாதுகாப்பு நிலையங்கள் இன்னும் இயங்கி வருகிறது. அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களை மீள குடியமர்த்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கம் பல்வேறு நிதி உதவித் திட்டங்களை அறிவித்துள்ளது. மக்களுக்கு 25,000 மற்றும் 50,000 ரூபாய் பெறுமதியான கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விவசாயம், ஏற்றுமதி விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடைத் துறை சார்ந்த பாதிப்புகளுக்குத் துரிதமாக இழப்பீடு வழங்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். முழுமையாகச் சேதமடைந்த வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாகத் தெளிவான திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 5,866 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த வீடுகளை நிர்மாணிக்க 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படவுள்ளது. அதன் முதற்கட்டமாக, 20 இலட்சம் ரூபாய் வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மூலம் நிலச்சரிவு அபாயம் இல்லாத பாதுகாப்பான பகுதிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. வெறும் தற்காலிக தீர்வுகளை வழங்காமல், மக்களின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நிரந்தர மீள்குடியேற்றத் திட்டங்களைச் செயல்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்-என்றார். (அ)

## அவசர கால...

ஆதரவாக 137 வாக்குகளும், எதிராக 27 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில், 110 மேலதிக வாக்குகள் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவசரகால சட்டத்தின் நீடிப்பு தொடர்பான இந்த தீர்மானம், நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் சட்ட ஒழுங்கை பராமரிக்கும் தேவையை முன்னிட்டு அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது.

இதேவேளை, எதிர்க்கட்சிகள் இந்த நீடிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவசரகாலச் சட்டத்தின் தொடர்ச்சி பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுட்டிக்காட்டின. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் ரூ. 20 மில்லியன் இழப்பு!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தகவல்

கொழும்பு, ஏப். 10

நடத்துநர்களின் மோசடிகளால் இலங்கை போக்குவரத்துச் சபை நாளொன்றுக்கு சுமார் 20 மில்லியன் ரூபாயை இழந்து வருவதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.


பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த தகவலை கூறினார்.

இந்த பாரிய நிதி இழப்பை "பொது நிதி கசிவு" என அடையாளப்படுத்திய அமைச்சர், பஸ் சேவைகள் மட்டுமன்றி, இலங்கை போக்குவரத்துச் சபையின் மனித வளக் கட்டமைப்பு உள்ளிட்ட முழு நிர்வாகமுமே மோசடிக்குள்ளாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபை தனியார்மயப்படுத்தப்படாது எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியாக கூறியுள்ளார்.

பொறுப்புடைமையையும் செயல்திறனையும் மீட்டெடுப்பதற்காக விரிவான சீர்திருத்தங்களை மேற்கொள்ள தயாராகவுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

புதிய தரநிலைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ள விரும்பாத அதிகாரிகளும் ஊழியர்களும் உடனடியாக பணி நீக்கம் செய்யப்படுவார்கள் எனவும் அமைச்சர் இதன்போது எச்சரித்தார்.



ஊழலுக்கு எதிராக எவ்வித சமரசமும் இன்றி உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், இலங்கை போக்குவரத்துச் சபையை ஒரு இலாபகரமான மற்றும் வினைத்திறன் மிக்க பொதுச் சேவையாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டில் வேலைவாய்ப்பு இழப்புக்களை எதிர்கொள்ள தொழில் அமைச்சு தயார்!

கொழும்பு, ஏப். 10

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக தற்போது வரை வேலைவாய்ப்பு இழப்புகள் குறித்த உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை என தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இருப்பினும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள அமைச்சு ஆயத்தமாகி வருகின்றது.

எரிபொருள் நெருக்கடியினால் தொழில் சந்தையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து தேசிய தொழில் ஆலோசனைச் சபையில் ஏற்கனவே விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தற்போதுவரை வேலை இழப்புகள் பதிவாகவில்லை என்றாலும், முதலாளிகள் மற்றும் ஊழியர் தரப்புடன் இணைந்து எதிர்கால நிலைமைகளைச் சமாளிப்பதற்கான திட்டங்கள் குறித்து அமைச்சு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல் நிலைமைகள் காரணமாக உலகளாவிய எரிபொருள் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், இலங்கையிலும் எரிபொருள் தொடர்பான சவால்களைத் தோற்றுவித்துள்ளன.

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக இலங்கை தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் குறித்து சர்வதேச தொழிலாளர் அமைப்பு சில மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.

சுமார் 374,000 தொழிலாளர்கள் இந்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மாதத்திற்கு சுமார் 48 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாடு திரும்பினார் ரணில்!

கொழும்பு, ஏப். 10

சிங்கப்பூரில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு நேற்றுக் காலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியுள்ளார்.

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக கடந்த மாதம் 15ஆம் திகதி சிங்கப்பூர் சென்றிருந்த அவர் சில நாள்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சையின் பின்னர் குணமடைந்து தற்போது நாடு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)


# அன்னை பூபதி ஊர்தி பவனி நேற்று நல்லூரில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 10

அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்தை தாங்கிய ஊர்தி நேற்று நல்லூர் - தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தில் இருந்து புறப்பட்டுள்ளது.

இவ்வாறு புறப்பட்ட ஊர்தி வடக்கு - கிழக்கு முழுவதும் ஊர்வலமாக வந்து, இறுதி நாளில் மட்டக்களப்பில் உள்ள தியாகி அன்னை பூபதியின் சமாதி அமைந்துள்ள பகுதியை சென்றடையவுள்ளது.

பின்னர் அங்கு இறுதி நாள் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-05)



# மின்வெட்டு நீடிக்குமானால் கட்டணத்தை குறையுங்கள்!

## மின்சார நுகர்வோர் சங்கம் வலியுறுத்து!

கொழும்பு, ஏப். 10

நாட்டின் பல பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை இரவு ஏற்பட்ட மின்சாரத் தடை தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மின்சார நுகர்வோர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த மின்சார நுகர்வோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக, 24 மணிநேரமும் மின்சாரத்தை தடையின்றி வழங்குவதாக உறுதியளித்தே மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன எனச் சுட்டிக்காட்டினார்.

எனவே, தடையின்றி மின்சாரத்தை வழங்க முடியாவிட்டால், அதிகரிக்கப்பட்ட கட்டணங்களை மீண்டும் திருத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

திங்கட்கிழமை ஏற்பட்ட மின்வெட்டானது சாதாரண தொழில்நுட்பக் கோளாறு அல்ல எனத் தெரிவித்த அவர், இவ்வாறான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பதை அதிகாரிகள் முன்கூட்டியே கணித்து அதற்கேற்ப திட்டமிட்டிருக்க வேண்டும் எனக் குற்றம் சாட்டினார்.

திவுலபிட்டிய, கட்டுநாயக்க, கட்டான, அத்துருகிரிய மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் சுமார் ஒரு மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால் மருத்துவமனை சேவைகள், மாணவர்களின் கல்வி மற்றும் சுயதொழில் செய்பவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, அரசாங்கம் திட்டமிட்ட மின்வெட்டு எதனையும் அமல்படுத்தவில்லை என்றும், பொதுமக்கள் முறைப்பாடளிக்கும் மின்வெட்டுக்கள் சாதாரண தொழில்நுட்பக் கோளாறுகளே என்றும் தெரிவித்துள்ளார்.

மின்சார நுகர்வோர் சங்கம் இந்த விவகாரத்தில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்பட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என மேலும் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# 436 புதிய வைத்தியர்கள் நியமனம்

கொழும்பு, ஏப். 10

பயிற்சிக்கு பின்னரான நியமனங்களுக்காக விண்ணப்பித்த 436 புதிய வைத்தியர்களுக்கான சேவை நிலையங்களை சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, நியமனம் பெற்றுள்ள வைத்தியர்கள் நேற்று முதல் நாளை வரையான காலப்பகுதிக்குள், தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள நாடளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகள் அல்லது சுகாதார நிறுவனங்களில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த புதிய வைத்தியர்கள் நியமனங்களுக்காக விண்ணப்பித்த விதம் மற்றும் அவர்களின் தகுதிப் பட்டியல் என்பவற்றின் அடிப்படையில், வெளிப்படையான மற்றும் விஞ்ஞான ரீதியான பொறிமுறையின் ஊடாக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் காணப்படும் வைத்தியர்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இவர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வாகனச் சந்தை வீழ்ச்சி நிலையில்

கொழும்பு, ஏப். 10

இலங்கையின் வாகனத்துறை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு குறித்த அச்சம் காரணமாக பாரிய பின்னடைவைச் சந்திக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற புதிய வாகன அறிமுக நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கியா மோட்டார்ஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் மகேன் தம்பையா இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 310 இலிருந்து 320 ஆக அதிகரித்துள்ளதால், வாகன இறக்குமதி விலைகள் பெருமளவு உயரும். உதாரணமாக, 30,000 டொலர் பெறுமதியான ஒரு வாகனத்தின் விலை சுமார் 10 இலட்சம் ரூபாவால் அதிகரிக்கக்கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வாகன இறக்குமதி மீள ஆரம்பிக்கப்பட்டபோது காணப்பட்ட ஆர்வம் தற்போது குறைவடைந்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 55,365 ஆக இருந்த புதிய வாகனப் பதிவுகள், பெப்ரவரியில் 51,682 ஆகக் குறைந்துள்ளன.

அத்துடன், வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முக்கியமானது.

2025 இல் 8.076 பில்லியன் டொலராக இருந்த இந்த வருமானம், எதிர்வரும் காலங்களில் 2 அல்லது 3 பில்லியன் டொலர்களால் வீழ்ச்சியடைந்தால் அது பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# யாழ். செயலகத்தில் ஆரோக்கிய உணவகம்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் புனரமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலையில் ஆரோக்கிய உணவகத்தை யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மேலதிக செயலர்கள், இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் உட்பட பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆரோக்கிய உணவக ஊழியர்களும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media